REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

## கண்ணுடிக் கப்பல்!

லண்டன், நவ. 5—

காந்தச் சுரங்கத் தாக்குதல்களினின்றும் தப்பிக்க, கப்பல்கள் கண்ணுடியிஞலேயே ஆக்கப்படலாம்என பிரிட்டன் கருதுகிறதாம்.

தடித்த கண்ணுடி 'நார்'களாலேயே .பெருங் கப்பல் இரண்டைக் கட்டுவதற்கான மிகப் பெரிய திட்டம் ஒன்றை ஏற்கனவே பிரிட்டன் தீட்டியுள்ளதாம்.

ஏற்கனவே கண்ணுடி நார்களால் இரண்டு யுத்தக் கப்பல்கள் தயாரிக்கப்பட்டுவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. அவை காந்தத் தாக்குதலுக்கு ஈடு கொடுக்கின்றன, வெற்றிகரமாயியங்குகின்றன என்பன போன்ற செய்திகள் பாதுகாப்பு கருதி விரிவாக வெளியிடப்படாமலிருக்கின்றனவாம்.

மலர் 2] சென்னை: ஐப்பசி 20உ வெள்ளி (5—11—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 24உ சனி (6—11—54) [இதழ் 124

# வ. ஆற்காடு மாவட்டக் கழகமா? ஜாதி வெறி குருட்சேத்திரமா?

## நாயக்கர் கட்சிக்கும் ரெட்டியார் கட்சிக்கும் ஆதிக்கப்போராட்டம்

## மந்திரி மாணிக்கவேலருக்குத் தோல்வி! மு. மந்திரி பெருமாள்சாமிக்கு வெற்றி!

## தலைவர் தேர்தலில் காங்கிரஸ் அதிகாரத்துக்கு சாவுமணி!

### வெற்றிக் களிப்பு வேதனை விம்மலாகிறது!

வேலூர், நவ. 4—

வட ஆற்காடு மாவட்டக் கழகத்தின் சிறப்புக் கூட்டம், கழகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக, இடைக்கால நிர்வாகத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. கழக மொத்த உறுப்பினர்களான 52 நபர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

எ. இ. சந்திரசேகர நாய்க்கர், காங்கிரஸ் கட்சியின் அதிகார பூர்வமான தலைவர் அபேட்சகராவர். தலைவர் தேர்தலுக்கு அவர் பெயர் முன் மொழியப்பட்டு வழிமொழியப்பட்டது. அவருடன், மற்ருெரு காங்கிரஸ் அபேட்சகரான பி. பி. கேசவ ரெட்டியார் தலைவர் இடத்திற்குப் போட்டியிட்டார்.

காங்கிரசின் அதிகாரபூர்வமான சந்திரசேகருக்கு 19 வாக்குகளும், அவரை எதிர்த்த சுயேச்சை காங்கிரஸ் கேசவனுருக்கு 30 வாக்குகளும் கிடைத்தன. எனவே, சுயேச்சை காங்கிரஸ் அபேட்சகரான பி. பி. கேசவர், மாவட்டக் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

52 உறுப்பினர்களைக் கொண்ட வட ஆற்காடு மாவட்டக் கழகத்தில் 36 காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்ளனர். தலைவர்களாகப் போட்டியிட்ட இரு உறுப்பினர்களும் வாக்களிக்கவில்லை. பதிவான வாக்குகளில் ஒன்று செல்லுபடியற்றதாகிவிட்டது.

இதற்கு முன், யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது என்று நிர்ணயிப்பதற்காக, த. நா. கா. தலைவர் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கூட்டத்தில், சந்திரசேகரரா, கேசவரா என்று முடிவு கட்டுவதில் பலமான தகராறு கிளம்பியது. சந்திரசேகரரை ஆதரிப்பது என்று கூட்டத்தில் முடிவு கிடைத்த போதிலும், அவரை எதிர்த்துத் தோற்கடிப்பது என்கின்ற முடிவிற்குச் சில காங்கிரஸ் உறுப்பினர்கள் அப்பொழுதே கங்கணம் கட்டிக் கொண்டனர்.

காங்கிரஸ் மாவட்டக் கழக உறுப்பினர் கூட்ட முடிவிற்கொப்ப, சந்திரசேகரரை தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படி, கட்சியின் சார்பில் அபேட்சகராக த. நா. கா. தலைவர் நியமித்தார். ஆனால் தலைவர் தேர்தலில், காங்கிரஸ் கட்சியால் நியமிக்கப்பட்டவர் தோற்கடிக்கப்பட்டு, அதுவும், ஒரு காங்கிரஸ் கட்சி அபேட்சகராலேயே தோற்கடிக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்டக் கழகத்தில் எவர் ஆதிக்கம் இருப்பது என்பதில், புதிய காங்கிரஸ் பக்தர் மந்திரி மாணிக்கவேலருக்கும், முன்னுள் மந்திரி பழைய காங்கிரஸ்காரர் பெருமாள்சாமி ரெட்டியாருக்கும் இருந்து வந்த பலமான போட்டா போட்டியின் எதிரொலியே இது என்று நம்பப்படுகிறது. அதுவுமன்றி, காங்கிரசில் முன்பின் என்ற வரிசையில் புகுந்துள்ள 'ஜாதி வெறி'யின் பயங்கரமான விளைவாகும் இந்த அவக்கேடு எனவும் சொல்லப்படுகிறது.

## தும்பை விட்டு வாலைப் பற்றும் விசித்திர சித்தர்!

## போலி வெற்றியின் பூரிப்புகண்டோர் முடிவில் புலம்புவது இயல்பு!

### கானல் நீர் வேட்டை கால் கடுப்பைத்தான் கொடுக்கும்!

### காங்கிரஸ் தோல்வியின் எதிரொலி!

வட ஆற்காடு மாவட்டக் கழகத் தலைவர் தேர்தலில் காங்கிரசால் நியமிக்கப்பட்ட அபேட்சகர், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களாலேயே தோற்கடிக்கப்பட்டது கண்டு, த. நா கா. தலைவரான எல். சட்டநாதக் கரையாளரை துக்கமும் வெட்கமும் தாக்கவே, பொல்லாக் கடுங்கோபத்துக்கு இரையாகியுள்ளார். 'பிடி, சாபம்' என ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கிளம்பியுள்ளார்.

காங்கிரசால் நியமிக்கப்பட்ட ஒரு அபேட்சகருக்கு எதிராக சில காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் தீவிரமாகப் பாடுபட்டிருக்கிருர்கள் என பலமாகச் சந்தேகிக்கப்படுகிறது. இத்துறையில் மேற்கொண்டு விசாரணையும் நடைபெறும். எனவே, பெருமாள்சாமி ரெட்டியார் (முன்னுள் மந்திரி), பி. எஸ். பாலாஜி, ஆர். சி. சாமண்ணா கவுண்டர் (மா. க. துணைத் தலைவர்), டி. பி. கேசவ ரெட்டி ஆகிய நான்கு மாவட்டக் கழக காங்கிரஸ் உறுப்பினர்களையும், காங்கிரசிலிருந்து நீக்கி வைக்கப்பட்டும் இருக்கிறது.

## காங்கிரஸ் தலைவர் கட்டளைக்கு அடிமேல் அடி!

### உறுப்பினர்களாலேயே காங்கிரஸ் பிய்த்தெறியப்படுகிறது!

### திருச்சி நகராட்சி தலைவருக்கு சீட்டு!

இன்று காலை 9 மணிக்கு திருச்சி டிப்டி கலெக்டர் முன்பு திருச்சி நகரசபை காங்கிரஸ் சேர்மன் ஏ. ராமசாமி தேவர் எம்.எல்.ஏ. மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது. 23 உறுப்பினர்கள் ஓட்டளித்தார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரேரேபித்தவர் காங்கிரஸ் உறுப்பினர் தோழர் சுப்பிரமணியம்; அவரைத் தொடர்ந்து மற்றும் ஒன்பது காங்கிரஸ் தோழர்கள் ஓட்டளித்தார்கள்.

மாகாண காங்கிரஸ் கட்சித் தலைவர் கரையாளர் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு கொடுக்கக் கூடாதென்று அறிக்கை விட்டு காங்கிரஸ் உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார். மீறினுல் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

அதையும் மீறி காங்கிரஸ்காரர்கள் 10 பேரும், சுயேச்சை உறுப்பினர்கள் 5 பேரும், திராவிட இயக்கத்தவர் 4 பேரும், கம்யூனிஸ்டுகள் 4 பேரும் ஆக 23 தோழர்கள் நம்பிக்கையில்லையென ஓட்டளித்தார்கள். தீர்மானம் நிறைவேறியது. (ந. நி.)

## சொந்த கட்சி மாநாட்டிற்கு கோவை ஆலை அரசுகள் தாராளம்!

### பஸ் உரிமையாளர் சங்கமும் காணிக்கை செலுத்தியது

கோவை ஆலை அரசர்களின் சார்பில் திரு. ஆர். வெங்கிடசாமி நாயுடு அவர்கள், அடுத்த ஜனவரியில் ஆவடியில் நடைபெற இருக்கும் காங்கிரஸ் மாநாட்டிற்கு நன்கொடையாக ரூ. 78,000-த்திற்கான 'செக்' ஒன்றை மாநாட்டிற்கு நிதி வசூலிக்க வந்திருந்த காமராசரிடம் தந்தார்.

கோவை பஸ் முதலாளிகள் சங்கத்தின் சார்பிலும் ரூ. 15,000 தரப்பட்டிருக்கிறது.

முதன் மந்திரி காமராசரும், நிதி மந்திரி சுப்பிரமணியமும், உத்தியோகப்பற்றற்ற முறையில் இந்தப் பெரும் நன்கொடையைப் பெற்றுக் கொள்வதற்காக விமான மூலம், சென்னையிலிருந்து வந்தனர்.

மந்திரிகளை கோவைப் பிரமுகர்கள் வரவேற்று உபசரித்து, அவர்களிடம் தம் சொந்தக் கட்சியான காங்கிரஸ் மாநாட்டிற்கு பெருந்தொகையை நன்கொடையாக தந்திருக்கின்றனர்.

## கோவை மாவட்ட கழக தலைவர் தேர்தல்

### காங். உறுப்பினர்களிடை பலத்த போட்டி

### சமரசம் காண கரையாளர் முயற்சி

கோவை மாவட்டக் கழகத் தலைவர், உப-தலைவர் தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சியினரிடையே பலத்த போட்டியிருக்கிறது.

கோவை மாவட்டத்தில் 41 காங்கிரஸ் உறுப்பினர்கள் உள்ளனர்.

வருகிற நவம்பர் 8-ந் தேதியன்று தலைவர், உப-தலைவர் தேர்தல் நடைபெற இருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் யார் யாரை நிறுத்துவது என்பதில் காங்கிரஸ்காரர்கள் அடிதடி சண்டையில் ஈடுபட்டிருக்கின்றனராம்.

திரு. எல். எஸ். கரையாளர் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில், உறுப்பினர்களிடையே சமரதானம் காண முயற்சித்து வருகிருராம்.

தலைவர் தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சி சார்பில், பழையகோட்டைப் பட்டயக்காரர் உட்பட மூன்று பேரும், உப-தலைவர் தேர்தலுக்கு 6 பேர்களும் போட்டியிடுகின்றனர் எனத் தெரிகிறது.

கலாட், மக்ரான், சாஸ்பெலா, கரான் ஆகிய 4 சமஸ்தானங்களும், பாகிஸ்தான் மத்திய சர்க்காரின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பலுசிஸ்தானம் மாநிலத்துடன் இணைக்கப்படும் என்று செய்திகள் கூறுகின்றன.

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5—11—1954 வெள்ளி


# நேர்மையல்ல!

★

ஆந்திர மாநில சர்க்கார், திருத்தணி ஊராண்மைக் கழகத்தைத் திடீரெனக் கலைத்து விட்டிருக்கின்றனர்.

ஊராண்மைக் கழகங்கள், நகரசபைகள் ஆகியவற்றின் அதிகாரி இந்த உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார் என்றும், இத்திங்கள் 11-ந்தேதியிலிருந்து அந்த உத்திரவு அமுலுக்கு வருகிறது என்றும் தெரிய வருகிறது.

திருத்தணி ஊராண்மைக் கழகத்தில், தமிழர்கள் அதிக அளவில் உறுப்பினர்களாக இருக்கின்றனரென்பது யாவரும் அறிந்ததே!

திருத்தணியின் எதிர்காலம் இன்னும் திட்டமாக நிச்சயிக்கப்படாத நிலை வேறு இருந்து வருகிறது.

'எல்லைக் குழு நியமிக்கப்படும்; தங்கள் எதிர்காலம் நம்பிக்கை கொண்டதாக இருக்கும்,' என்று திருத்தணியில் வாழும் மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குள்ள இன்றைய பிரச்சினையெல்லாம், எதிர்காலத்தில் . தங்கள் நிலை என்ன, தமிழ் நாட்டுடன் எப்போது சேர்ந்து வாழ்வோம் என்பதுதான்.

இப்பிரச்சினையில், மத்திய சர்க்கார், ஏதும் அறியாதது போல் அமைதியுடன் இருக்கிறது.

இதுபோன்ற சூழ்நிலையில், ஆந்திர சர்க்கார், திடீரென்று நியாயமான காரணம் ஏதும் காட்டாமல், திருத்தணி ஊராண்மைக் கழகத்தைக் கலைத்திருக்கிறார்கள்; இச்செயல், மிகவும் வருத்தத்தைத் தரக்கூடியதாகும்.

திருத்தணி ஊராண்மைக் கழகத்தில் தற்போது உறுப்பினர்களாக இருப்போர் இன்னும் ஓராண்டு காலம் பதவியிலிருக்க உரிமையுடையவர்கள்; அவர்களுக்கு சட்டம் அளித்துள்ள உரிமை பறிக்கப்படுகிறதென்றால், 'ஜனநாயக முறைக்கு விரோதமாக நடக்கிறார்கள்,' என்ற குற்றச்சாட்டுக்கு, ஆந்திர சர்க்கார் ஆளாக வேண்டும்.

தனது அதிகாரத்தின் கீழ் உள்ள ஊராண்மைக் கழகங்களின் போக்கு, நீதிக்கும் நேர்மைக்கும் எதிராக இருக்கிறது என்றால், அல்லது, ஊராண்மைக் கழகங்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்துகிறது என்றால், சர்க்கார், அவைகள் மீது நடவடிக்கை எடுப்பதுதான் முறையாகும்; அப்படி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் பொருத்தமான காரணங்களைக் காட்ட வேண்டும்.

இவையொன்றும் காட்டப்படாத நிலையில், திடீரென எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையைக் கண்டு திருத்தணி மக்கள் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். அதன் அறிகுறியாக, திருத்தணியில் பொது கடையடைப்பு நடைபெற்றிருக்கிறது.

மொழிப் பிரச்சினை, எல்லைப் பிரச்சினை, எதிர்கால வாழ்வு ஆகிய சிக்கல்கள் உள்ள போது, ஆந்திர சர்க்காரின் இதுபோன்ற நடவடிக்கைகள் தேவையற்ற விளைவுகளைத்தான் ஏற்படுத்தும்.

அரசியல் பிரச்சினைகள் பற்றி மக்களிடையே மனக்கொதிப்பு உள்ளபோது சர்க்காரின் அவசர நடவடிக்கைகள் மக்களின் நலனைப் பாதுகாப்பதாக இருக்க முடியாது என்பதை ஆந்திர சர்க்கார் நன்றாக உணர்ந்தவர்கள்தான் எனலாம்.

ஊராண்மைக் கழகத்தைக் கலைத்து, அதன் மூலம் திருத்தணி மக்களின் உள்ளங்களில் வேதனையை மூட்டுவது நேர்மையல்ல, ஜனநாயகத்திற்கு ஏற்ற செயல் அல்ல என்று குறிப்பிட வேண்டியுள்ளது.

ஆந்திர சர்க்கார் தனது உத்திரவு பற்றி மீண்டும் சிந்திப்பது நல்ல பயனைத் தரும் என்று கூறிக்கொள்ளுகிறோம்.

## நல்லதோர் வாய்ப்பு!

இலங்கை இந்தியத் தூதுவரான தோழர் தேசாய், இத்திங்களில் பதவியை விட்டுச் செல்கிறார். கடந்த பத்து ஆண்டுகளாக இலங்கை—இந்தியாவுக்கிடையே மிகப் பெரிய பிரச்சினை ஏதாவது ஒன்று உண்டு என்றால், அது, இலங்கையில் வாழும் திராவிட மக்களின் எதிர்காலத்தைப் பற்றியதுதான்.

திராவிட மக்களின் வாழ்வில் அக்கறை கொண்ட சர்க்கார் புதுடில்லியில் ஆட்சியில் இருந்தால் இந்நேரம் இப்பிரச்சினை நல்ல முறையில் தீர்ந்து போயிருக்கும்.

வட நாட்டு மக்களின் உயர்வையே எண்ணும் சர்க்கார் புதுடில்லி ஆட்சி பீடத்திலிருப்பதால்தான், இலங்கைவாழ் திராவிடர்களின் நிலை இன்று நம்பிக்கையற்று இருக்கிறது.

இலங்கைவாழ் திராவிடர்கள்மீது அன்புதான் இல்லாவிட்டாலும், இலங்கைக்குத் தூதுவர்களை நியமிப்பதிலும் கூட, இந்திய சர்க்கார் சிந்தனையுடன் செயலாற்றுவது கிடையாது.

இலங்கையில் வாழும் இந்தியர்களில் பெரும்பான்மையோர் தமிழர்கள்; ஆகவே, இலங்கையின் தூதுவராக ஒரு தமிழரை நியமிக்க வேண்டும் என்று இந்த நாட்டில் உள்ள பல கட்சியினரும் வற்புறுத்தி வருகிறார்கள். சென்னை சட்டசபையிலும் இதுபற்றி பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

தேசாய்க்குப் பின்னர் நியமிக்கப்படவிருக்கும் தூதுவர் நியமனத்தில் இக்கோரிக்கையை இந்திய சர்க்கார் கவனிக்க ஒரு வாய்ப்பு இருக்கிறது.

தமிழ்மொழி அறிந்த ஒருவர், இலங்கை இந்தியர் பிரச்சினையின் எல்லா நுணுக்கங்களையும் தெளிவுடன் தெரிந்து கொள்வது மிகவும் எளிது என்பதை இந்திய சர்க்கார் உணர வேண்டும்.

தமிழ் மொழியை எழுதவும், பேசவும் தெரிந்தவராகவும், திராவிட மக்களின் கலாச்சாரப் பண்பாடுகளை நன்கு அறிந்துள்ளவராகவும் உள்ள ஒருவர் இச்சிக்கலான நேரத்தில், இலங்கையில் இந்தியத் தூதுவராக சிறந்த முறையில் பணியாற்றுவார் என்று நம்ப இடமுண்டு.

இப்பணியினைச் செய்ய—உண்மையில் திறமைசாலி ஒருவரை நியமனம் செய்ய இந்திய சர்க்காருக்கு நல்லதோர் வாய்ப்பு இப்பொழுது இருக்கிறது. செய்வார்களா?

## காமன்வெல்த் சட்ட நிபுணர்கள் மாநாடு

அடுத்த ஆண்டு ஜூலை இறுதி வாரத்தில் லண்டனில் காமன்வெல்த் சட்ட நிபுணர்கள் மாநாடு நடக்கும், காமன்வெல்த் நாடுகளிலும், காலனிகளிலும் உள்ள சட்டக் கழகங்களும், நிபுணர்களும் மாநாட்டில் கலந்துகொள்வார்கள். காமன்வெல்த் நாடுகளுக்குள் தடையின்றி வழக்கறிஞர்கள் தொழில் நடத்துதல், நிலச்சட்டம், வழக்கறிஞர், சட்ட மாணவர் நாடு விட்டுச் சென்று பயிலுதல், பரிவர்த்தனை, ஜூரி முறையில் சீர்திருத்தம்—இவைபோன்ற பல பொருள்கள் மாநாட்டில் ஆலோசிக்கப்படும் எனத் தெரிகிறது.

## ஒற்றர் கூட்டத்தினர்

### கராச்சியில் மேலும் மூன்று பேர் கைது!

பாகிஸ்தான் இரகசியப் போலீஸ் இலாகாவினர் நாடு முழுமையும் இயங்கும் ஒற்றர் கூட்டமொன்றினைச் சேர்ந்தவர்கள் எனப்படுவோர் மூன்று பேர்களைக் கைது செய்துள்ளனர்.

இதுவரை இப் பிரச்சினையின் 15 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஒற்றர்கள் சதி செய்யும் நோக்கத்தைப் போலீசார் வெளிப்படையாகக் கூறுவது, இதுபற்றி இராஜதந்திர உறவில் சிக்கல் ஏற்படுவதைத் தவிர்க்கத்தான் என்று கருதப்படுகிறது.

## குற்றப் பட்டியல் நீளுகிறது!

### முன்னாள் மந்திரி கைதானார்!

எகிப்து பிரதமர் காமல் அப்டெல் நாசரின் உயிரைக் குடிக்கச் சென்ற வாரம் நடைபெற்ற முயற்சியின் எதிரொலியாக எகிப்தில் பலரும் கைது செய்யப்பட்டு வருகிற செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

அந்த வகையில், எகிப்தின் முன்னாள் கல்வி மந்திரியான முகம்மது ஹாசன்எல் அச்சா மௌல்வி என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளாராம்.

நாசரைக் கொன்று வீழ்த்தி அதிகாரத்தைக் கைப்பற்றுகிற சதித் திட்டம் நிறைவேறினால், ஹாசன் தான் அதிகாரப் பொறுப்பேற்றுக்கொள்வதாக இருந்ததாம்.

இந்தச் சதியில் சம்பந்தப்பட்டிருக்கிறார் எனக் கருதப்படும் அரேபிய லீகின் முன்னாள் பொதுக் காரியதரிசியான அப்டெல் நெஹ்மினை இன்னமும் கைது செய்ய முடியவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

## பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை

### விரிவுபடுத்த ரூ. 6½ கோடியில் திட்டம்

மைசூர் சர்க்காருக்குச் சொந்தமான பத்ராவதி இரும்பு, எஃகுத் தொழிற்சாலையை மேலும் விரிவுபடுத்துவதற்காக, ரூ. 6½ கோடித் திட்டம் ஒன்றை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் சேர்க்க, மைசூர் சர்க்கார் ஆலோசித்து வருகிறது

இத்தொழிற்சாலை, 1923-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, படிப்படியாக நவீன இயந்திர சாதனங்களுடன் சேர்க்கப்பட்டு அபிவிருத்தியடைந்துள்ளது.

இப்புதிய திட்டப்படி, 'ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்' தகடுகளும், கம்பி, கம்பி ஆணிகளும் உற்பத்தி செய்யப்படும். 'ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்' தயாரிக்கும் இயந்திரம் இத்தொழிற்சாலையில் அமைக்கப்படுகிறதாயிருந்தால், இந்தியாவிலேயே இத்தொழிற்சாலை முதல் தரமான ஒன்றாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

தற்சமயம் இத்தொழிற்சாலையில் 9,000 டன் குழாய்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், அவற்றுள் 40 சத விகிதம் சென்னைக்கும், 20 சதவிகிதம் பம்பாய்க்கும், அனுப்பப்பட்டு, முள்ளவைகளை மைசூர் சர்க்காரும் உபயோகித்து வருவதாகத் தெரியவருகிறது.

இத்தொழிற்சாலையில் 6,000 - பேர் நேரடியாக வேலை செய்வோராவர். நேரடித் தொடர்பில்லாமலேயே சுமார் 5,000 பேர் வேலை செய்து வருகின்றனராம்! இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளதின் காரணமாக, பத்ராவதி ஆற்றின் அருகில் ஒரு சிறிய நகரமே அமைக்கப்பட்டுள்ளதாம்! மேலும், அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களில், சுமார் பாதிப் பேருக்கு ஏற்கனவே வீடுகள் வழங்கப் பெற்றிருக்கின்றன. இவ்வாறு வழங்கப்பெற்ற வீடுகளுக்காக, பள்ளிகள், மருத்துவ மனைகள், குடிதண்ணீர், பாதாள சாக்கடை ஆகியவை உட்படப் பல வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளனவாம்!

## அவாமி லீக் தலைவர் சுஹ்ரவர்த்தி

### பாக். மந்திரி சபையில் சேரமாட்டார்!

பாகிஸ்தானில் முகம்மது அலி தலைமையில் உருவாகியுள்ள புதிய மந்திரி சபையில் பாக். அவாமி லீக் கட்சித் தலைவரான சுஹ்ரவர்த்தி சேரமாட்டார் எனத் தெரிகிறது.

"சிலர் கருதுவதுபோல, புதிய அமைச்சரவையை பாக். கவர்னர்-ஜெனரல் ஒரு இடைக்கால அரசாங்கமாகக் கருதுவாரானால், சுஹ்ரவர்த்தி சற்று பொறுத்திருப்பார்; மந்திரி சபையில் சேரமாட்டார்; பின்னர் அவர், புதிய அமைச்சரவையை அமைக்குமாறு அழைக்கப்பட்டால், அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடும்," என்ற தகவல்கள் மூலம் தெரிய வருகிறது.

"பாகிஸ்தானில் ஒரு தேசிய சர்க்கார் அமைப்பதற்கு இதுவே நல்ல தருணம்; ஆனால் துரதிருஷ்ட வசமாக, எதிர்க் கட்சியினர் ஒதுக்கப்பட்டு விட்டிருக்கின்றனர்," என்று, குறிப்பிடப்படுவதாகவும் தெரிகிறது.

## சீனாவுக்குப் பர்மிய அரிசி

சீன அரசாங்கம் பர்மாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி பர்மாவிலிருந்து சுமார் 1,50,000 டன் அரிசியை சீனா வாங்கும் என அதிகாரபூர்வமாக இங்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரு நாடுகளுக்குமிடையே கடந்த ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்டுள்ள மூன்று வருட வர்த்தக ஒப்பந்த மூலப்படியே இப்போது உருவான அரிசி ஏற்றுமதி ஒப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

மூல ஒப்பந்தத்தில் பர்மாவும், சீனாவிலிருந்து ஏற்றுமதியாகிற பொருள்களை வாங்கிக் கொள்ளும் எனக் கண்டுள்ளது.

## ஆந்திர மாநில தேர்தல் தொகுதிகள்

ஆந்திர சட்டசபையில் 196 ஸ்தானங்கள் இருக்குமெனவும் ஆந்திர மாநிலத்திலிருந்து மக்கள் சபைக்கு 28 ஸ்தானங்கள் உண்டென்றும், தேர்தல் தொகுதி நிர்ணயக் குழு முடிவு செய்துள்ளதாம்.

இந்த முடிவுகளை, ஆந்திர அரசாங்கம், அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளது.

மக்கள் சபைக்கான 28 இடங்களில் 23 பொதுத் தொகுதிகளாகவும், 4 ஷெட்யூல் வகுப்பினருக்கெனவும், ஒரு இடம், பழங்குடி மக்களுக்கெனவும் ஒதுக்கப்பட்டுள்ளனவாம்.

இந்த 28 உறுப்பினர்களும் 23 தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர்.

சட்டசபைக்கு 167 தொகுதிகளிலிருந்து 196 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். 165 இடங்கள் பொது; 26 ஷெட்யூல் வகுப்பு; 5 பழங்குடி மக்களுக்கென பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் தொகுதி நிர்ணயக் குழுவின் இந்த முடிவுகள் இறுதியானவை எனவும், முடிவுகளை மேற்கொள்ளுமுன், எழுந்த எல்லா கருத்து வேறுபாடுகளும் கவனத்திற்கொள்ளப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா முழுவதிலும் வேலை நிறுத்தம்

### அ. இ. துறைமுகத் தொழிலாளர் கழகம் ஆலோசனை செய்கிறது

அகில இந்தியத் துறைமுகத் தொழிலாளர் கழக நிர்வாகக் குழுவினர் இந்தியா முழுமையும் வேலை நிறுத்தம் செய்வது பற்றி ஆலோசனை செய்வார்கள் என்று தெரிகிறது.

பம்பாய், சென்னை, சௌராஷ்டிரம், கல்கத்தா, திரு—கொச்சி ஆகிய பகுதிகளில் உள்ள மூன்று லட்சம் துறைமுகத் தொழிலாளர்கள் இக்கழகத்தின் உறுப்பினர்கள் என்று சொல்லப்படுகிறது.

தொழிலாளர்களின் நிலை பொதுவாக உயரவேண்டுமென்றும், குறைந்த பட்சக் கூலி நிர்ணய சட்டத்தை அமுல் நடத்தவேண்டுமென்றும் அவர்கள் கோருகின்றனர்.

## சென்னை சர்க்காரின் விற்பனை வரி

### வடநாட்டு முதலாளிகள் எதிர்ப்பு

உணவுத் தானியங்கள், எண்ணெய் விதைகள் ஆகியவை மீது மாநிலங்களுக்கிடையேயுள்ள போக்குவரத்துக்கு சென்னை சர்க்கார் விற்பனை வரி விதிப்பதை ஆட்சேபிக்கும் வகையில் மத்தியப் பிரதேசத்தின் பல பாகத்திலுமுள்ள உணவு தானிய, எண்ணெய் விதை வியாபாரிகள் கடையடைப்புச் செய்தனர்.

உணவு தானிய விலைகள் ஏற்கனவே இறங்கி வருவதால், பாதிக்கப்பட்டுள்ள வியாபாரிகளுக்கு இந்த வரியானது; தாங்க முடியாத பளுவாகும் என்று மத்திய பிரதேச தானிய, எண்ணெய் வியாபாரிகளின் சம்மேளனம் ஒன்று கூறியிருக்கிறது.

# ஆச்சரியம் - ஆனால் உண்மை!

## 47 ஆண்டுகள் தன்னந்தனியாகவே பத்திரிகை வெளியிட்டவர்!

லண்டன், நவ. 4—

'சௌத் தேவான் வீக்லி எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக, அச்சுக்கோர்ப்பவராக, நிர்வாகியாக, விளம்பர நிர்வாகியாக—பணியாற்றி வந்த பத்திராதிபர் ஆல்பர்ட் ரிச்சர்டு ஹோல்கம் என்பவர் தமது 83-வது வயதில் இறந்துவிட்டார் என்ற செய்தி வெளிவந்துள்ளது.

அவர், நாளொன்றுக்கு 10 மணி நேரம் உழைப்பாராம்.

தாமே செய்தி திரட்டி வந்து, அவைகளைத் தாமே எழுதி, தாமே அச்சுக் கோர்த்து, தாமே அச்சடித்து பத்திரிகையாக்கி, தாமே விநியோகிப்பாராம்!

அவர், தனது 12-வது வயதில் பத்திரிகைத் தொழிலில் புகுந்தார்; பின்னர், ஒரு அச்சகத்தில் சேர்ந்து பணியாற்றினார்; 1907-ம் ஆண்டில் 'எக்ஸ்பிரஸ்' என்ற பத்திரிகை விற்பனைக்குக் கிடைப்பதாக அறிந்து தேவான்ஷயர் சென்று அதை வாங்கினார்.

கடந்த 47 ஆண்டு காலமாக தாம் ஒருவரே பணியாற்றி இதழ்களை வெளிக் கொண்டு வந்திருக்கிறார். சிற்சில சமயங்களில் இந்த இதழ்கள் வெளிவராமல் போகுமாம்.

பின்னர், அடுத்த இதழில் வழக்கமாக, "எனக்கு ஏற்பட்டிருந்த தீவிரமான நோயினால் இதழ் வெளிவரச் செய்ய இயலாது போயிற்று; மன்னித்தருள்க!" என்று அறிவிப்பு வருமாம்.

கடந்த உலக யுத்தம்வரை இந்த 'எக்ஸ்பிரஸ்' இதழின் விலை ஒரு பென்னியாக இருந்ததாம்.

பத்திரிகைக்கான காகிதம் யுத்த காலத்தை முன்னிட்டு பங்கீடு முறையில் தரப்பட்டதால், இவர் தனது பத்திரிகையின் அளவைக் குறைத்தாராம்; பத்திரிகையின் அளவைக் குறைத்துவிட்டதால் அதன் விலையையும்குறைக்க வேண்டுமென எண்ணி, விலையை அரை பென்னியாக்கினார்.

அதற்குப் பின்னர், பத்திரிகையின் விலையை எப்போதும் உயர்த்தவே இல்லை; பிரிட்டனிலேயே தனது பத்திரிகையைப் போன்று மலிவாகக் கிடைக்கிற பத்திரிகை வேறெதுவுமே இல்லை என்று அவர் பெருமைப் பட்டுக்கொள்வாராம்.

சராசரியாக வாரந்தோறும், சுமார் 500 பிரதிகள் விற்பனையாகுமாம். ஒரு முறை இவரது பத்திரிகை சுமார் 10,000 பிரதிகள் விற்பனையானதாம். அதாவது, 'முதலாம் உலக யுத்தம் வரப் போகிறது,' என்று ஒரு பிரெஞ்சு சந்நியாசி கூறியதாக முன்கூட்டியே ஒரு செய்தி வெளியிட்டாராம். அந்த வார இதழ்தான் அவ்வளவு அதிகமாக விற்பனையாயிற்றாம்.

இப்பொழுது இயற்கையெய்தி விட்ட அந்த பத்திராதிபரின் மகளான ஜூலியா என்பவர் அந்தப் பத்திரிகையை தொடர்ந்து நடத்துகிறார் எனத் தெரிகிறது.

# கியூபாவில் தேர்தல் கலவரம்!

## தெருக்களில் துப்பாக்கிச்சண்டை

கியூபாவில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் பெருத்த அளவில் கலவரம் நடைபெறுகிறதாம்.

ஹவானா, சாண்டியாகோ என்ற நகரங்களில் தெருக்களில் அரசியல் எதிரிகளிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது என்று தெரிகிறது. சுட்டதில் எத்தனை பேர் மாண்டனர் என்பது தெரியவில்லை.

சாண்டியாகோவில் ஆயுதம் தாங்கிய கூட்டமொன்று வாக்குப் பதிவு நிலையம் ஒன்றைத் தாக்கி உள்ளேயிருந்த வாக்குப் பெட்டிகளையும், ரிக்கார்டுகளையும் கைப்பற்றியதாம்.

ஹவானாவில் மோட்டார் கார் ஒன்றில் வந்த ஆயுதம் தரித்த கூட்டமொன்று கடற்படைக் காரியாலயத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாம்!

போலீசார், பாதுகாப்பு ஏற்பாடுகளை இரட்டித்திருக்கிறார்கள். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டவர்தான் இப்படி தேர்தலை கலைக்கத் திட்டமிட்டார் என்று வதந்திகள் உலவுகின்றன.

# பாங்கி ஊழியர் தகராறு

## அசோக்மேத்தா உபதேசம்!

"தொழிலாளர்கள், தாங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமுன், சமரசத்துக்கு எந்த ஒரு வழியிலாவது முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்," என்று, பி.-சோ. கட்சித் தலைவரான அசோக்மேத்தா, பம்பாயில் நடைபெற்ற பாங்கி ஊழியர்களின் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். அக்கூட்டத்தில், அப்பீல் மன்றத்தின் தீர்ப்பை மாற்றி, அது பிறப்பித்த உத்தரவை அமுல் நடத்தும்போதே, வேறொரு புதிய விசாரணைக் குழுவை சர்க்கார் நியமித்தது குறுக்குத்தனமான செயல் என்றும், இந்த நிலையில், ராஜாத்யக்ஷா குழுவினருடன் ஒத்துழைப்பதென்பது, ஊழியர்களுக்குப் பாதகத்தையே விளைவிப்பதாகும் என்றும், தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# ஆண்டிற்கு 12,000 மோட்டார் லாரிகள்

## இந்திய சர்க்கார் உற்பத்தி செய்யும்?

டில்லியில் நடைபெற்ற போக்குவரத்து ஆலோசனைக் குழுக் கூட்டம் ஒன்றுக்குத் தலைமை தாங்கிய மத்திய சர்க்கார் போக்குவரத்து அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி, அடுத்த சில ஆண்டுகளுக்குள், ஆண்டொன்றுக்கு சுமார் 12,000 மோட்டார் லாரிகளை உற்பத்தி செய்வது சர்க்காரின் இலட்சியம் எல்லையென்றும், போக்குவரத்துகளை சர்க்கார் உடைமையாக்கும் திட்டத்தை இன்னும் சில காலத்திற்கு ஒத்திப்போட வேண்டுமென்று, பம்பாய் தவிர மற்ற மாநிலங்கள் கருதுகின்றன என்றும் குறிப்பிட்டார்.

"நாட்டின் பொருளாதார நிலை அபிவிருத்திக்கு ரயில் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து, கடல் மார்க்கப் போக்குவரத்து ஆகியவைகள் பெருகுவது மிகவும் அவசியமானவைகளாகும்; சமுதாயத்துக்கு குறைந்த செலவில், திறமையுள்ள போக்குவரத்து அளிப்பதே சர்க்காரின் முக்கிய இலட்சியமாக இருக்கவேண்டும்."

# ஒப்பந்தம் வேலைசெய்கிறது

சூயஸ் கால்வாய் பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பினை, எகிப்திய இராணுவத்தினர் ஏற்றுக் கொண்டனர்.

அண்மையில், எகிப்து—பிரிட்டன் ஆகிய இருநாடுகளுக்கு மிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக பிரிட்டிஷ் துருப்புக்கள் சூயஸ் கால்வாய் பகுதியில் செய்து வந்த பாதுகாப்பு வேலையை விடுத்து, இடத்தை காலி செய்துவிட்டன; அந்த இடங்களில்தான் இப்போது எகிப்து படையினர் இடம் பெறுகின்றனர்.

விமானத் தளங்களையும், ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை எகிப்து இராணுவம் மேற்கொண்டுள்ளதாம்.

# அல்ஜீரியாவில் பல கட்சியினர் கைது!

## பிரெஞ்சுக்காரர்களின் நடவடிக்கை!

அல்ஜீரியா முழுவதிலும் கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்ற பயங்கரத் தாக்குதல்களையொட்டி, பிரெஞ்சு அதிகாரிகள் அல்ஜீரிய தேசியவாதிகள், கம்யூனிஸ்டுகள், தொழிற்சங்கவாதிகள் ஆகியோரில் பலரைக் கைது செய்துள்ளனராம்.

ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்காக உள்ள தேசிய இயக்கமொன்றின் பொதுக் காரியதரிசியான மௌலே மெர்பா என்பவர் கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவர்.

மற்றும் கம்யூனிஸ்டு கட்சிப் பொதுச் செயலாளரும் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டாராம்.

'லிபர்டி' என்ற கம்யூனிஸ்டு கட்சி வாரப் பத்திரிகையை அரசாங்கம் தடை செய்துவிட்டதாம். நாட்டில் நிலவுகிற அமைதியை சீர்குலைக்கும் வகையில் அப்பத்திரிகையில் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன என்பதே குற்றச்சாட்டு எனத் தெரியவருகிறது.

பிரெஞ்சு யுத்த இலாகா மந்திரி, தாக்குதல் நடைபெற்ற இடங்களைப் பார்வையிட்டபின் குறிப்பிட்டிருப்பதாவது:—

"உண்மையிலேயே அப்பகுதிகள், புரட்சிமயமாகவே இருந்தன; "சுமார் 200 முதல் 250 வரை எண்ணிக்கையுள்ள டுனிஷியர்கள் அல்ஜீரியாவில் தாக்குதலை நடத்தியவர்களுடன் கலந்துகொள்வதற்காக வந்திருக்கின்றனர்—டுனிஷியாவிலிருந்து திருட்டுத்தனமாக எல்லையை மீறி!

"இந்த 'பயங்கரவாதிகள்' தாமாகவே இயங்கும் இயந்திர துப்பாக்கிகளுடனும், மோட்டார், ரேடியோ வசதிகளுடனும் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர் இவர்களுக்குத் தலைவன் 'க்ரைன்' என்பவன். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது."

# குண்டூரில் புதிய சிறைச்சாலை

## சிறை இலாகா அதிகாரி தகவல்

குண்டூரில் ஆந்திர மாநில உயர் நீதிமன்றம் நிறுவப்பட்டிருப்பதை யொட்டி, குண்டூரில் மாவட்ட சிறைச்சாலை ஒன்று கட்டுவது என அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக, ஆந்திர மாநில சிறை இலாகா அதிகாரி தகவல் வெளியிட்டுள்ளார்.

புதிய ஒரு மாவட்ட சிறை அமைக்கப்படுவதினால், மத்திய சிறைச்சாலையிலும் இன்னும் உள்ள 'சப் ஜெயில்'களிலும் நிலவும் இடநெருக்கடியும் சற்று குறையும். அந்த சிறைக் கட்டுவதற்கான தகுந்த இடம் காணுவது பற்றி அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது என்று திரு. அய்யங்கார் அறிவித்திருக்கிறார்.

## தமிழ்மொழி பாதுகாப்பு மாநாட்டுச் செயற்குழு

தூத்துக்குடியில், இம்மாதம் 27, 28ம் நாட்களில் நடைபெற இருக்கும் தமிழ் மொழி பாதுகாப்பு, இலங்கை, திருவாங்கூர் தமிழர்கள் ஆதரிப்பு மாநாடுகளின் செயற்குழு கூட்டம் 31—10—54 காலை 9 மணிக்கு தோழர் ந. சண்முகம் தலைமையில் நடைபெற்ற போது, அம்மாநாட்டிற்கான நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: வ. கு. தலைவர்: பெ. வா. பொன்னுசாமி; ஊர்வலத் தளபதிகள்: எஸ். வி. காசிநாதன், ஏ. சுந்தரபாண்டியன், வே. அருணுசலம்; நிதி வசூலிப்பவர்கள்: வே. ஏசுதாசன், பீரிஸ்.

# எதிர்க் கட்சிகள் இயங்க முடியாது! பத்திரிகை சுதந்திரமுமில்லை!

## உலக நடப்பு சீன மக்களுக்குத் தெரியாது!

### சீனா சென்றுவந்த பண்டித நேருவின் கருத்து!

சீன நாட்டில் சுற்றுப் பயணம் செய்து இந்தியா திரும்பியுள்ள பண்டித நேரு கல்கத்தாவில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில், கம்யூனிஸ்டு சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் அரசியல் அமைப்பு வேறுபாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டதாவது:—

"சர்க்காரின் சாதனைகளை எதிர்த்துப் பேசவும், எழுதவும் இந்தியாவில் அனுமதியிருக்கிறது. பாராளுமன்றத்திலும், பத்திரிகைகளிலும், மாநில சட்டசபைகளிலும், அவைகள் கண்டிக்கப்படுகின்றன; ஆனால், இதுபோன்ற நிலை கம்யூனிஸ்டு சீனாவில் கிடையாது.

"கம்யூனிஸ்டு சீனாவில் அரசியல் எதிர்க்கட்சிகளுக்கு வேலை இல்லை; அவைகள் இயங்கும் சூழ்நிலை கிடையாது," என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவில் மத்திய சர்க்காரில் ஒரு பாராளுமன்றமும், மாநிலங்களில் பிரதேசவாரி உரிமை கொண்ட சட்டசபைகளும் உள்ளன; ஆனால், சீனாவில், மத்திய சர்க்கார் செய்கிற எந்த முடிவும் நாட்டின் முடிவாகும்; அது நாடு முழுமையும் ஒப்புக்கொள்ள வேண்டிய ஒன்றாகும்," என்று பண்டித நேரு மேலும் கூறினார்.

தான் சீனாவில் இருந்தபோது வெளிஉலகில் நடைபெறும் காரியங்களைப் பற்றி இந்தியத் தூதுவராலயத்தின் மூலமாகவே தெரிந்து கொண்டதாகவும், கம்யூனிஸ்டு சீனாவில் உள்ள மக்களுக்கு வெளி உலகில் என்ன நடைபெறுகிறது என்பது அறவே தெரியாது என்றும் அவர் மேலும் கூறினார்.

குறிப்பு:—இந்தியாவில் கிடைப்பதாக பண்டித நேரு கூறும் உரிமைகள் பல ஏட்டளவில் தான் உள்ளன என்பதை மக்கள் அறிவார்கள்.

## தென் இந்திய நடிகர் சங்கம்

### நிர்வாகக் குழுவினர் தேர்வு

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் புதிய ஆண்டிற்கு கீழ்க் கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: டி. வி. சுந்தரம்; துணைத் தலைவர்கள்: எஸ். வி. சகஸ்ரநாமம், டி. கே. கல்யாணம், திருமதி எஸ். டி. சுப்புலட்சுமி, திருமதி எஸ். ஆர். ஜானகி; செயலாளர்கள்: எம். ஜி. ராமச்சந்திரன், டி. என். சிவதாணு; பொருளாளர்: ஆர். எஸ். மனோகர்; செயற்குழுவினர்: டி. கே. சண்முகம், டி. கே. பாலசந்திரன், கே. ஜனார்த்தனம், எம். ஆர். சந்தானம், ஆர். எம். சோமசுந்தரம், ஆர். எம். வீரப்பன், என். எஸ். நாராயணபிள்ளை, எம். ஜி. சக்கரபாணி, கே. என். வெங்கட்டராமன், டி. கே. மாரியப்பா, டி. எஸ். துரைராஜ், எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். எஸ். கருப்பையா, ஜி. கோவிந்தராஜுலு நாயுடு, என். என். கண்ணப்பா, கே. ஆர். சீதாராமன், எம். என். கிருஷ்ணன், எம். கோசலம், எம். கே. முஸ்தபா, திருமதி ஜி. சகுந்தலா.

## சித்த வைத்திய சங்கம்

23—10—54 அன்று மாலை 7 மணிக்கு விருதை திருப்புகழ்ச்சாமி மடத்தில் திரு. சா. வேதமுத்து தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: டாக்டர் ஆர். வி. பிலிப்ஸ்; துணைத் தலைவர்: வீ. ரா. முத்துசிங்கு; செயலாளர்: சா. வேதமுத்து; துணைச் செயலாளர்: மோ. தாவீது. துரைச்சாமி.

## திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழா

31—10—54 மாலை 6 மணிக்கு சென்னை 37-வது வட்டத்தில், புதுப்பேட்டை தோட்டத் தெரு திடலில் மேற்படி கழகத்தின் துவக்கவிழா தோழர் கே. ஆர். சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின்னர், தோழர்கள் அழகேசன், மு. புரட்சிமணி, ஏ. கே. வில்வம் ஆகியோர் பேசினர்.

கழகத்தைத் திறந்து வைத்து தோழர் கண்ணதாசன் பேசிய பின்னர், தோழர் என். வி. நடராசன் நீண்டதோர் விளக்கவுரை ஆற்றினர்.

குறிப்பு: கூட்டத்திற்கு ஒலி பெருக்கிக்கு அனுமதி கொடுக்க போலீசார் கடைசி நேரத்தில் மறுத்துவிடவே ஒலிபெருக்கி இல்லாமலேயே கூட்டம் நடைபெற்றும் மக்கள் பெருமளவில் கூடியிருந்தனர்.

## தாளமுத்து—நடராசன் முன்னேற்ற மன்றம்

31—10—54 இரவு 8 மணிக்கு வட சென்னை,— இராயபுரத்திலுள்ள மேற்படி மன்றத்தின் அவசரப் பொதுக்குழு கூட்டம் தோழர் கே. வேதாசலம் தலைமையில் நடைபெற்றபோது, மன்றச் செயலாளராக 'முகைஅன்பு' அவர்களும், நிதி வசூலிப்பவர்களாகத் தோழர்கள் கே. வேதாசலம், வி. எஸ். ஆனந்தன், இ. அன்பானந்தன், எம். முனிரெத்தினம், மு. பொன்முடி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## மறைவு

திருச்சினம்பூண்டி தி. மு. கழக உறுப்பினரும், தஞ்சை மாவட்ட செயற்குழு பிரதிநிதியுமான தோழர் இரா. அப்பாவு அவர்கள் தன் 36-வது வயதில் 29—10—54 வெள்ளிக் கிழமை மாலை 5 மணியளவுக்கு இருதயக் கோளாறினால் இயற்கை எய்திவிட்டார். அன்னாருக்கு ஒரு ஆண் குழந்தையும் மூன்றுபெண்குழந்தைகளும் இருக்கின்றன. அவர் கழகப் போராட்டங்களில் முன்னின்று பணியாற்றியதோடு, கழகக் கொள்கைகளையும் பரப்பி வந்தார். அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தாருக்கு திருச்சினம்பூண்டி தி. மு. கழகத்தினர் அனுதாபம் தெரிவித்துக் கொள்கின்றனர் — அவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபமும் உரித்தாகுக. (ஆர்.)

பெரியகுளம் வட்டாரக் கல்வி அதிகாரி காரியாலயத்தின் அட்டெண்டர் தோழர் மருதமுத்து அவர்கள் 25—10—54 இரவு 11 மணிக்கு திடீரென காலமானார். மரணமுற்றது குறித்துத் தங்கள் அனுதாபம் தெரிவிக்கும் வகையில் 200 ஆசிரியர்களும், டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்றன. சவ ஊர்வலத்தின் போது ஊரின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அச்சுறுத்தல்!

எகிப்து பிரதமரைக் கொல்ல முயற்சித்தது பற்றி நடைபெற்று வரும் விசாரணையை மேற்கொண்டுள்ள நீதிபதிகளுக்கு, 'தொடர்ந்து அவர்கள் விசாரணையிலீடுபட்டால் அவர்கள் கொல்லப்படுவார்கள்,' என்று பயமுறுத்தி, அனுமதியற்ற கடிதங்கள் வந்துள்ளதாக எகிப்து பிராசிகியூடர் - ஜெனரல் அலுவலக அதிகாரி ஒருவர் கூறியதாக செய்தி வெளிவந்துள்ளது.

# "நாடுவிடுதலைபெறும்வரை ஓயமாட்டேன்"!

## கயானா மக்கள் தலைவர் முழக்கம்

"ராயல் குழுவின் அறிக்கை, மக்கள் திறமைக்கு அவக்கேட்டை உண்டுபண்ணுகிறது" என்கிறார்!

"என்னுடைய நாடு விடுதலை பெறும்வரையில் நான் ஓய்ந்திருக்கமாட்டேன்; கருங்காலிகளைப்போல் வாழமாட்டேன்; அல்லது, ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு 'பராக்கு' கூறமாட்டேன்; கயானாவைப் பற்றி பிரிட்டிஷார் தயாரித்துள்ள அறிக்கை, கயானா மக்களின் திறமையை அவமதிப்பதாகும்," —என்று பிரிட்டிஷ் கயானாவின் மக்கள் கட்சித் தலைவரும், பதவியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் கயானா பிரதமருமான டாக்டர் ஜெகன் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் சர்க்காரால் நியமிக்கப்பட்ட குழு ஒன்று, கயானாவின் நிலைமைபற்றித் தயாரித்திருக்கும் அறிக்கை பற்றி தனது கருத்தைத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினர்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:

"இந்த அறிக்கை முழுமையும் ஒரே குழப்பமானது; லஞ்சம் கொடுத்து இனவெறியைத் தூண்டி, பிளவுகளினாலும், சந்தர்ப்பம் அளிப்பதாலும் நாட்டை இழி நிலைக்குக் கொண்டு செல்லும் யோசனைகளுடன் அந்த அறிக்கை உள்ளது.

"பிரிட்டிஷாரின் ஜனநாயகம் காலனிகளுக்குப் புதிய விளக்கம் தந்துள்ளது. மக்களுக்கு வாக்களிக்க உரிமையிருக்கிறது; ஆனால், அவர்களது எஜமானர்கள், யாரை விரும்புகிறார்களோ அவர்களுக்குத்தான் வாக்களிக்க வேண்டும். இது போன்ற நிலை ஏற்படும்வரை, நாட்டிற்காகத் தியாகம் செய்தவர்களையும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களையும் மக்கள் துச்சமென மதிக்கும் வரையில், அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் வாக்குரிமை ரத்து செய்யப்பட்டிருக்கும்; இதுதான் பிரிட்டிஷாரின் ஜனநாயக விளக்கம்."

★

ராயல் குழுவினர் தயாரித்த அறிக்கை பற்றி கயானா மக்கள் கட்சியினர் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுவதாவது:—

"குழுவின் உறுப்பினர்கள், மக்கள் கட்சியின் வலிவை உணர்ந்து கொண்டவர்கள்; ஆகவே, அவர்கள் மக்களின் உள்ளத்தைத் திருப்ப பல வழிகளைக் கூறியுள்ளனர். 1947–லிருந்து, கயானாவில், இனவாரி பேதம் அதிகமாகிவிட்டதென்ற குழுவின் கருத்து தவறானதாகும். மக்கள் கட்சியின் வலிவு இன ஒற்றுமையின் காரணமாக ஏற்பட்டதே. கயானாவின் சுய ஆட்சிக்குக் காலம் செல்ல வேண்டுமென்று குழுவினர் கூறியுள்ளனர்.

"இக்காலத்தில் அடக்குமுறைகள், லஞ்சம்கொடுத்தல், அச்சுறுத்தல் போன்றவைகளால் பலரை பிரிட்டிஷாரின் 'பாதந்தாங்கி'களாக மாற்ற முனைவார்கள்.

"இக்குழுவினரின் வருகையினால் வரி கொடுப்போரின் செலவம் பாழானதுதான் மிச்சம்.

"நாங்கள் எங்கள் விடுதலைப் போரை, கயானா விடுதலை பெறும் வரை தொடர்ந்து இடையறாது உறுதியுடன் நடத்துவோம்."

## கடலை எண்ணெய்

### ஏற்றுமதி வரி குறைப்பு

புதுடில்லி, நவ. 5—

கடலை எண்ணெய் ஏற்றுமதி வரியை, மத்திய சர்க்கார் டன்னுக்கு ரூ. 125 குறைத்துள்ளனராம்.

மேலும், மத்திய சர்க்கார் வர்த்தக, கைத்தொழில் இலாகா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், கடலை எண்ணெய் ஏற்றுமதி வரியை டன்னுக்கு ரூ. 225–லிருந்து ரூ. 100 ஆகக் குறைக்கவும் மத்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதென்றும், இது, விரைவிலேயே அமுலுக்கு வரும் என்றும் கூறப்படுகிறது.

### சென்னை மாணவர் மன்ற உறுப்பினர் கூட்டம்

7—11—54 மாலை 3 மணிக்கு எண். 17, ரத்தின முதலி தெருவில், மாணவர் மன்ற உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் அடுத்த ஆண்டுச்செயற் குழுவினர் தேர்தல், சென்ற ஆண்டு வரவு–செலவு கணக்கு முதலிய குறித்து ஆய்ந்து முடிவு செய்யப்படும்.

### மதுரை தி. ம. மன்றம், அழகிரி நினைவுப் படிப்பக உறுப்பினர்களுக்கு

7—11—54 காலை 10 மணிக்கு திராவிட மறுமலர்ச்சி மன்றம், அழகிரி படிப்பகத்தின் (மதுரை நகர் உட்கிளை) செயற் குழுவினர் தேர்தல் மேற்படி படிப்பகத்தில் நடைபெறும்.

### திருப்பூர் தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

7—11—54 காலை 9 மணிக்கு திருப்பூர் தொழிலாளர் படிப்பகத்தில், திருப்பூர் நகர தி. மு. கழக கமிட்டிக் கூட்டம். நடைபெறும் அதுபோது, நகரக் கழகத்தின் மறு தேர்தல் நடைபெறும்.

## கழகக் கூட்டங்கள்

★

திருச்செங்கோடு
7—11—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

கல்லுக்குழி
திருச்சிசந்திப்புக்குபின்புறமுள்ள உலகநாதபுரம் திடலில்
7—11—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
என். வி. நடராசன்
அம்பில் தர்மலிங்கம்
எம். எஸ். மணி
ஐ. எம். ஷரீப்

★

வேலூர்
கோட்டை வெளியில்
7—11—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
மு. கருணாநிதி
சுரதா
எஸ். எஸ். தென்னரசு

★

கடம்பர்கோவில் (குளித்தலை)
திரு. வி. க. திடலில்
7—11—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: தி.வீ.முத்துக்கிருஷ்ணன்
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

கோவை
(தி. மா. மு. கழகம்)
காந்திச் சவுக்கத்தில்
7—11—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஓ. கே. நல்லமுத்து
பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
எஸ். ஏ. இராசமாணிக்கம்
ஜனார்த்தனம்
சி. டி. தண்டபாணி

# கயானா சிறை அதிகாரி குற்றவாளியாகிறார்!

## சட்ட விரோதமாக ஜெட்டி ஜெகனுக்கு பேட்டி அனுமதித்தாராம்!

பிரிட்டிஷ் கயானாவின் சிறைகளின் அதிகாரியான சாமுவேல் பகர் என்பவர், சட்டம் அனுமதி தரும் அளவிற்குமேல், கயானா மக்கள் கட்சித் தலைவர் ஜெகனின் மனைவியார் திருமதி ஜெகனை, அவரது கணவரைப் பேட்டி காண அனுமதித்ததாகக் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறார்.

தனது கணவரை, சிறையில் ஏழு தடவைகள் கடந்த ஏப்ரல் திங்களில் பேட்டி காண திருமதி ஜெகனை சிறைகளின் அதிகாரி அனுமதித்தாராம். சட்டப்படி நான்கு தடவைகள்தான் அனுமதி கொடுக்கலாமாம்.

இத்துடன் அவர் சிறை 'ரிகார்டு'களை அழித்ததாகக் குற்றவாளியாக்கப்பட்டிருக்கிறார்.

இந்தக் குற்றங்களுக்காக அவருக்கு என்ன தண்டனை அளிக்கப்படும் என்று அறிவிக்கப்படவில்லை.

# அமெரிக்கத் தேர்தல்கள்

## ஜனநாயகக் கட்சியின் வெற்றி

நியூயார்க், நவ. 4—

அமெரிக்கப் பாராளுமன்றங்களின் இரு சபைகளுக்கும், புதிதாக நடைபெற்ற தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன.

இப்போது மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் பதவிகளுக்குத்தான் தேர்தல்கள் நடைபெற்றன.

முடிவுகள் பின்வருமாறு:—

சேனேட்:

| | |
|---|---|
| ஜனநாயகக் கட்சியினர் | 48 |
| குடியரசுக் கட்சியினர் | 47 |
| சுயேச்சை | 1 |

கீழ்சபை:

| | |
|---|---|
| ஜனநாயகக் கட்சியினர் | 232 |
| குடியரசுக் கட்சியினர் | 203 |

கவர்னர்கள் தேர்தல்:

| | |
|---|---|
| ஜனநாயகக் கட்சியினர் | 27 |
| குடியரசுக் கட்சியினர் | 21 |

சேனேட் சபையில் உள்ள சுயேச்சை உறுப்பினர் ஜனநாயகக் கட்சியை ஆதரிப்பார் என்று தெரிகிறது.

## சப்-மாஜிஸ்திரேட் தற்கொலை!

காஞ்சிபுரத்திலுள்ள சப்-மாஜிஸ்திரேட் என். சாமிநாத அய்யர் (வயது 47), கொசத் தெருவில் உள்ள தமது வீட்டின் பின்புறமுள்ள கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிய வருகிறது.

அவருக்கு மனைவியும் ஆறு குழந்தைகளும் இருக்கின்றனர். ஆறு குழந்தைகளில் 5பேர் ஊமையர்களாம்! அவருக்கும் சில காலமாகவே உடல்நலமில்லாமல் இருந்ததாம். ஆக, அவர் வாழ்க்கையில் வெறுப்புற்று, மனங்குழம்பி தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

விசாரணையில் அவர் தற்கொலை புரிந்துகொண்டார் என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

### தோழர் ஆசைத்தம்பி இலங்கை பயணம்

திருச்சி, நவ. 4—

இன்று காலை 11 மணிக்கு தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி திருச்சி விமான நிலையத்திலிருந்து சிலோனுக்குப் புறப்பட்டார். திருச்சி நகர தி. மு. கழக செயலாளர் எம். எஸ். மணி வழியனுப்பி வைத்தார். (ந–ம்.)

## ஆஸ்திரேலியாவில் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்!

ஆஸ்திரேலியத் துறைமுகங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் 24 மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தனர்.

இதுபோன்ற வேலை நிறுத்தம் ஆஸ்திரேலியாவின் சரித்திரத்தில் இதுவரை நடைபெற்றது கிடையாது என்று தெரிகிறது.

தொழிலாளர்கள் தேவைப்பட்டால் புதிய தொழிலாளர்களை நியமிக்கும் பொறுப்பு இப்போது துறைமுகத் தொழிலாளர்கள் கழகத்தினிடம் உள்ளது.

இப்பொறுப்பை சர்க்கார் இப்பொறுப்பை முதலாளிகளிடம் அளிக்க சட்டமியற்றப் போகிறார்களாம். இதை எதிர்க்கும் முறையில் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

# தொழிலாளரிடையேயும் இனவெறி!

## வெள்ளையரல்லாத தொழிலாளருடன் பணியாற்ற லண்டன் பஸ் தொழிலாளர் மறுப்பு!

## 'தொழிற் சங்க போதனை' என்னவாயிற்று?

லண்டன், நவ. 4—

தெற்கு லண்டனிலுள்ள பஸ் தொழிலாளர்கள், தங்களுடன் இரண்டு வெள்ளையரல்லாதார் சேர்ந்து வேலை செய்வதை எதிர்த்து, தாங்கள் வேலை செய்ய மறுத்துவிட்டிருக்கின்றனர்.

ஜமைக்காவைச் சேர்ந்த ஒருவரையும், ஆங்கிலோ-பர்மியர் ஒருவரும் ஆகிய இரண்டு வெள்ளையரல்லாதார் பஸ் 'கண்டக்டர்' வேலைக்குப் பயிற்சியளிக்கப்பட நியமிக்கப்பட்டனர். அந்த இரண்டு வெள்ளையரல்லாதாருடன் சேர்ந்து வேலை செய்ய வெள்ளைத் தொழிலாளர்கள் மறுக்கின்றனராம்.

தொழிற்சங்க ரீதியாக லண்டன் பஸ் தொழிலாளர் ஒன்றுபட்டிருக்கின்றனர்.

# ஜாதி வெறியர்களிடையே அடிதடி

## கிணற்றுப்பாதை அமைப்பதில் தகராறு!

அருப்புக்கோட்டையை அடுத்த பாப்பனம்பட்டி எனும் ஊரில், அரசாங்கம், கிராம மக்களின் குடி தண்ணீர் வசதிக்காக ஒரு கிணறு வெட்டிக் கொடுத்தது.

ஊருக்குள்ளிருந்து அந்த கிணற்றுக்குச் செல்வதற்கு பாதை வேண்டாமா? அதை அமைப்பதில் ஊரில் வசிக்கும் அரிசனங்களுக்கும்—தேவர்களுக்கும் மிடையில் தகராறு ஏற்பட்டது.

இந்த தகராறு முற்றி அடிதடி கலகம்வரை சென்றுவிட்டது; அதன் விளைவாக மூன்று பெண்கள் உட்பட பதினேரு பேருக்கு காயங்கள் ஏற்பட்டன.

காயம்பட்டவர்கள், அருப்புக்கோட்டை சர்க்கார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

# அல்ஜீரிய நகரம் முற்றுகையிடப்பட்டது!

## பிரெஞ்சு ஆதிக்க எதிர்ப்பு வலுக்கிறது!

கிழக்கு அல்ஜீரியாவில் ஆரிஸ் பகுதியின் நிர்வாக நகரமான ஆரிஸ் நகரை ஆயிரத்துக்கு மேற்பட்ட தேசியவாதிகள் வளைத்துக் கொண்டனர் என்றும், இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் தாக்குதல் நடத்தி மூன்று நாட்களாகத் தங்கள் முற்றுகையை நீடித்து வருகின்றனர் என்றும் தெரிகிறது.

நகரின் உள்ளே வாழும் 2,500 ஐரோப்பியர்களுக்கு ஹெலிகாப்டர் மூலம் தேவையான பொருள்கள் அனுப்பப்படுகின்றன என்று தெரிகிறது. ஆனால், 200 ஐரோப்பியர்கள் தப்பித்துக்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

டுனிஷிய பயங்கரவாதிகள் சுமார் 250 பேர் எல்லையைக் கடந்து அல்ஜீரிய பயங்கரவாதிகளுடன் கலந்துவிட்டனர் என்று பிரெஞ்சு அதிகாரிகள் கூறுகின்றனர்.

இப்பகுதிகளில் நிலைமை மோசமாக இருக்கிறது என்று பிரான்சின் போர் இலாகா செயலாளர் கூறியுள்ளார். 135 பேர் கைது செய்யப்பட்டதாகவும், அல்ஜீரியப் பயங்கரவாதிகளின் தளபதி எனப்படும் ஒருவர் கொல்லப்பட்டுக் கிடந்ததாகவும் பிரெஞ்சு அதிகாரிகள் கூறினர்.

### டாக்டர் கான் சாகிப்

பாகிஸ்தான் மந்திரி சபையில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள டாக்டர் கான் சாகிபிடம் செய்திப் போக்குவரத்து இலாகா ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம்.

பாதுகாப்பிலாகா உதவி அமைச்சரிடம் அகதி இலாகா தற்காலிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அதிகார பூர்வமான அறிவிப்பொன்று கூறுகிறது.

### சீன மீது சியாங்கின் தாக்குதல் தொடர்கிறது!

சீனாவை அடுத்துள்ள மேன் தீவில், கம்யூனிஸ்டு சீன விமானங்களுக்கும், சியாங் விமானங்களுக்கு மிடையே போர் நடைபெற்றதாகவும், அந்தப் போரின் போது, மேன் தீவின் மேல் சியாங் விமானங்கள் ஏராளமான குண்டுகள் வீசினதாகவும் அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.